அறிக்கை அளித்தல்

(அ) உரிமைக் குழு

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, 'இந்து' ஆங்கில நாளேடுக்கு 'சட்டமன்ற செயலகம்' என்ற தலைப்பில் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் எழுதிய கடிதம் குறித்து அவர் மீதும் அதனைப் பிரசுரித்ததற்காக 'இந்து' நாளேடு மீதும் எழுப்பப்பெற்றுள்ள உரிமைமீறல் பிரச்னை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்

[ஆ] பொது நிறுவனங்கள் குழு

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்—

(அ) 1971–72ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைபற்றிய பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பனிரெண்டாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1960–61 ஆம் ஆண்டு முதல் 1965–66ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான பொது நிறுவனங்கள் குழு (1974–75)அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை.

(இ) 1973–74ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத்துறைகள் பற்றிய அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினான்காவது அறிக்கை.